## போக்குவரத்து மற்றும் பயணப் படி பற்றிய சிறு விளக்கம்..!

பொதுவாக பார்ப்பதற்கு **TRANSPORT** மற்றும் **TRAVELLING ALLOWANCE** என்பதன் அர்த்தம் ஒரே மாதிரியாக தெரியும். ஆனால் மத்திய அரசு ஊழியர்களை பொறுத்தமட்டில் இரண்டும் வெவ்வேறு அர்த்தம் கொண்டவை. இதை பற்றி எழுதவேண்டும் என்ற எண்ணம் உருவானதற்கு காரணம், சமீபத்தில் **DOPT** மற்றும் **FINANCE MINISTRY** வெளியிட்ட **TRAVELLING ALLOWANCE** தொடர்பான ஆணைகளே.

மத்திய அரசு ஊழியர்கள் அலுவலகத்திற்கு வந்து செல்லும் போக்குவரத்து செலவினை கருத்தில் கொண்டு வழங்கப்படுவதே **TRANSPORT ALLOWANCE** ஆகும். இது அவரவர் பெரும் அடிப்படை சம்பளத்தை அளவு கோலாக கொண்டு ரூ 400 முதல் 3200 வரை மாதந்தோறும் வழங்கப்படுகிறது. அலுவலகம் அமைந்துள்ள நகரத்தின் மக்கள் தொகை அடிப்படையில் இந்த போக்குவரத்து படி வேறுபடும். ஊனமுற்றோருக்கு இந்த படியானது இரட்டிப்பாக வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

DOPT கடந்த வாரம், அலுவலக வேலை நிமித்தமாக விமான பயணம் மேற்கொள்ளும் உயர் அதிகாரிகள், தாங்கள் செலவு செய்ததை திரும்பபெற கோரும் போது, 'போர்டிங் பாஸ்' சமர்பிக்க அவசியம் இல்லை, தேவைபட்டால் சமர்பிக்கலாம் என ஆணை பிறப்பித்தது. அதற்கு மறு நாளே FINANCE MINISTRY, 'போர்டிங் பாஸ்' சமர்பிப்பது கட்டாயம் என தெரிவித்து ஆணை வெளியிட்டது அனைவரும் அறிந்ததே.

அலுவலக வேலை நிமித்தமாக வெளியில் செல்லும் ஊழியர்களுக்கு வழங்கப்படும் போக்குவரத்து படி தான் **TRAVELLING ALLOWANCE.** இதற்கு பல விதிமுறைகள், கட்டுப்பாடுகள் உள்ளன. அவ்வப்போது DOPT மற்றும் FINANCE MINISTRY, **TRAVELLING ALLOWANCE** தொடர்பான திருத்த ஆணைகளை வெளியிட்டு வருகின்றன.

ஒவ்வொரு ஊழியருக்கும் அவர் வகிக்கும் பதவி மற்றும் அடிப்படை சம்பளம் இரண்டையும் கருத்தில் கொண்டு, போக்குவரத்து விதிமுறைகள் வகுக்கப் பட்டுள்ளது. பஸ், ரயில்,கப்பல், விமானம் ஆகியவற்றில் உள்ள உரிமை மற்றும் பயண வகுப்பின் படி தான் பயணம் மேற்கொள்ள வேண்டும். உரிமைக்கு உண்டான செலவின தொகை மட்டுமே திரும்ப பெற முடியும்.

ஊழியரின் பயணம் நாட்கணக்கில் செல்லும் போது, போக்குவரத்து செலவினத்தை தவிர்த்து மற்ற செலவினங்களுக்காக வழங்கப்படுவது தான் **DAILY ALLOWANCE.** சாப்பாடு, தங்குதல் போன்ற இதர செலவினங்களுக்காக வழங்கப்படும் இந்த படியிலும், ஊழியரின் பதவி மற்றும் அடிப்படை சம்பளம் இரண்டையும் கருத்தில் கொள்ளப்படுகிறது. இதைத்தான் **TA/DA** என்கிறார்கள்.

இந்த **TA/DA Claim**-ன் போது செலவு செய்ததற்கான ரசீதுகளை சமர்பிக்க வேண்டும். அந்தவகையில், விமான பயணம் மேற்கொள்ளும் உயர் அதிகாரிகள், விமான பயணம் மேற்கொண்டதற்கான 'போர்டிங் பாஸ்' சமர்ப்பிப்பது தொடர்பாக வெளி வந்த ஆணைகள் சற்றே குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது. இது GROUP 'C' ஊழியர்களுக்கு பொருந்தக்கூடியது அல்ல.

ஆனால், சிலர் இதை தவறாக புரிந்து கொண்டு, LEAVE TRAVEL CONCESSION போது மேற்கொள்ளும் விமான பயணத்திற்கும் இது பொருந்துமா என கேட்டுள்ளனர்.